**பத்திரிகை செய்தி**

# மஹிந்திராவின் புதிய ‘பொலெரோ நியோ’ ரூ. 8.48 லட்சம் ஆரம்ப விலையில் அறிமுகம்!!

- **ஸ்கார்பியோ & தார் [*Scorpio & Thar*] ஆகிய கம்பீரமான வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சேஸிஸ்சின் 3-வது தலைமுறை சேஸிஸ் [*3rd generation chassis*] மூலம் பொலெரோ நியோ [*Bolero Neo*] கட்டுக்கோப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதனுடன் தனது அபாரமான ஆற்றலை சாலைகளில் நிரூபித்துக்காட்டியிருக்கும் மஹிந்திரா எம்ஹாக் எஞ்சினுடன் [*Mahindra mHawk engine*] உருவாக்கப்பட்டுள்ளது.**

- **ப்ரீமியம் இத்தாலிய வடிவமைப்பில் அழகியல் அம்சங்களுடனான உள்வடிவமைப்பு மற்றும் கண்களைக் கவரும், பார்வையை விலக்க தோன்றாத அட்டகாசமான வெளிப்புற தோற்றத்துடன் இவ்வாகனம் அறிமுகமாகியுள்ளது.**

- **இன்று முதல் இந்தியா முழுவதிலும் செயல்பட்டு வரும் மஹிந்திரா டீலர்ஷிப்களில் புதிய பொலெரோ நியோ கிடைக்கிறது.**

**சென்னை, ஜூலை** 13, 2021: இந்தியாவின் முன்னணி ஆட்டோமொபைல் நிறுவனங்களில் ஒன்றாகவும், ட்ராக்டர் உற்பத்தி எண்ணிக்கையில் உலகின் மிகப்பெரிய ட்ராக்டர் நிறுவனமாகவும் முன்னிலை வகிக்கும் மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் [Mahindra & Mahindra Ltd.], இன்று தனது புதிய ‘பொலெரோ நியோ’ [‘Bolero Neo’]-வை அறிமுகப்படுத்தியது. இன்று முதல் இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மஹிந்திரா டீலர்ஷிப்களிலும் இந்த புதிய வாகனம்  கிடைக்கிறது, புதிய பொலெரோ நியோவின் N 4 வேரியண்ட்டின் விலை ரூ. 8.48 லட்சம் (எக்ஸ்-ஷோரூம் எக்ஸ்எக்ஸ்) ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய பொலிரோ நியோ, எந்த சூழ்நிலையிலும் கட்டுக்கோப்பான உறுதியுடன் இருக்கும், ஒரு உண்மையான அதே நேரம் சமகால பாணியிலான, நவீன தோற்றத்திலான  எஸ்யூவி வாகனத்திற்கான தேடலுடன்  அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களின் எதிர்பார்புகளை நிறைவேற்றும் ஒன்றாக அறிமுகமாகி இருக்கிறது. மேலும் தற்போது சாலைகளில் வலம்வரும் பொலெரோ, சந்தையில் பொலெரோ நியோவுடன் தொடர்ந்து விற்பனை செய்யப்படும்.

**எம் & எம் லிமிடெட்டின், ஆட்டோமோட்டிவ் பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரி வீஜய் நாக்ரா** [Veejay Nakra, Chief Executive Officer, Automotive Division, M&M Ltd] **கூறுகையில்,**

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

“பொலெரோ நியோ, எந்த சூழ்நிலையிலும் கட்டுக்கோப்பான உறுதியுடன் இயங்கும், அபாரமான ஆற்றல் கொண்ட, எங்குவேண்டுமானாலும் கம்பீரமாக பயணிக்கும் வலிமையுடைய வாகனத்தை எதிர்பார்க்கும் சமகால வாடிக்கையாளர்களின் நவீன எதிர்பார்புகளையும், அவர்களது ஆளுமையையும், லட்சியங்களையும் ஒன்றாக இணைக்கும் எஸ்யூவியாக அறிமுகமாகி இருக்கிறது புதிய பொலெரோ நியோவின் அட்டகாசமான வடிவமைப்பு, அபாரமான செயல்திறன் மற்றும் அசத்தலான பொறியியல் மேம்பாட்டு அம்சங்கள், வலிமையான மற்றும் அச்சமற்ற இன்றைய இளம் இந்தியாவிற்கு ஏற்ற ஒரு நவீன, அசல் எஸ்யூவியாக முன்னிறுத்தி இருக்கின்றன. எங்கள் ப்ராண்ட் போர்ட்ஃபோலியோவில் பொலெரோ நியோவையும் தற்போது இணைத்திருப்பதன் மூலம், இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் முதல் 10 எஸ்யூவிகளில் பொலெரோவிற்கான தனித்துவத்தை தக்க வைத்துக் கொள்ள உதவும்.” என்றார்.

நவீன வடிவமைப்பு, சக்திவாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் சௌகரியமளிக்கும் அம்சங்களுடன் உருவாகி இருக்கும் பொலெரோ நியோ அதிகரித்து வரும் இன்றைய இளைய தலைமுறை வாடிக்கையாளர்களுக்காக ப்ரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற இத்தாலிய ஆட்டோமோட்டிவ் டிசைனர் ஃபினின்ஃபரினா [Pininfarina] வடிவமைத்திருக்கும் ஸ்டைலான புத்தம் புதிய வடிவமைப்பு மற்றும் ப்ரீமியம் தரத்திலான உட்புற தோற்றம், சௌகரியமான கேபின் வசதி மற்றும் தரமான இரட்டை ஏர்பேக்குகள், எலெக்ட்ரானிக்

**பொலெரோ நியோவை ஒரு அசல் எஸ்யூவியாக உணர வைக்கும் ப்ரத்யேக அம்சங்கள்**

- ✓ ***சமகால பாணியிலான, கவனத்தை ஈர்க்கும் டிசைன், ப்ரீமியம் இத்தாலிய டிசைனிலான உள்புறம் மற்றும் சௌகரியமளிக்கும், வசதிகளை கொடுக்கும், இணைப்பில் இருக்கச் செய்யும் பல்வேறு நவீன அம்சங்கள்.**
- ✓ ***73.5 kW (100 BHP) ஆற்றல் மற்றும் உடன் 260 Nm டார்க்கை அளிக்கும் அபாரமான செயலதிறன் கொண்ட mhawk100 engine.**
- ✓ ***எங்கு வேண்டுமானாலும் பயணிக்கும் ஆற்றல் கொண்ட ஸ்கார்பியோ & தார் [*Scorpio & Thar*] ஆகிய கம்பீரமான வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சேஸிஸ்சின் 3-வது தலைமுறை சேஸிஸ்.**
- ✓ ***மல்ட்டி டெரெய்ன் டெக்னாலஜி (MTT).**
- ✓ ***குறிப்பிடத்தக்க பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் குறைந்த கட்டணத்திலான உரிம அனுபவம்.**
- ✓ **குறைந்த செலவிலான பராமரிப்பு.**

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

ப்ரேக் டிஸ்டிரிபியூஷன் உடனான (ஈபிடி) ஆண்டி-லாக் ப்ரேக்கிங் சிஸ்டம், மற்றும் கார்னரிங் பிரேக் கன்ட்ரோல் (சிபிசி) மற்றும் ஐஎஸ்ஓஃபிக்ஸ் குழந்தை இருக்கை [dual airbags, anti-lock braking system (ABS) with electronic brake distribution (EBD) & cornering brake control (CBC) & ISOfix child seat.] உள்ளிட்ட பாதுகாப்பு தொழில்நுட்ப அம்சங்கள் இதில் அடங்கும். மேலும் புதிய பொலெரோ நியோ, ஸ்கார்பியோ & தார் [*Scorpio & Thar*] ஆகிய கம்பீரமான வாகனங்களுக்கு பயன்படுத்தப்பட்ட சேஸிஸ்சின் 3-வது தலைமுறை சேஸிஸ் [*3rd generation chassis*] மூலம் பொலெரோ நியோ [*Bolero Neo*] கட்டுக்கோப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனுடன் தனது அபாரமான ஆற்றலை சாலைகளில் நிரூபித்துக்காட்டியிருக்கும் மஹிந்திரா எம்ஹாக் எஞ்சினுடன் [*Mahindra mHawk engine*] உருவாக்கப்பட்டுள்ளது.

**எம் & எம் லிமிடெட் நிறுவனத்தின் ஆட்டோமோட்டிவ் பிரிவின் உலகளாவிய தயாரிப்பு மேம்பாட்டுத் தலைவர் திரு. வேலுசாமி ஆர் [Velusamy R, Chief of Global Product Development, Automotive Division, M&M Ltd] கூறுகையில்,** "ஸ்கார்பியோ மற்றும் தார் ஆகிய இரு வாகனங்களின் வடிவமைப்பில் பகிர்ந்து கொள்ளப்பட்ட சேஸிஸ்சின் மூன்றாம் தலைமுறை சேஸிஸ் கொண்டு கட்டமைக்கப்பட்ட, பொலெரோ நியோ சக்திவாய்ந்த குணாதிசயங்களைக் கொண்டுள்ளது. இதன் மூலம் தனித்துவமான எஸ்யூவியாக அறிமுகமாகி உள்ளது. அதன் கட்டுக்கோப்பான உடல்-கட்டமைப்பின் கட்டுமானம், இந்திய சாலைகளில் தனது ஆற்றலை நிரூபித்திருக்கும் மஹிந்திரா எம்ஹாக் டீசல் எஞ்சின் மற்றும் எந்தவிதமான நிலப்பரப்பிலும் அனாயசமாக பயணிக்கும் ஆற்றலை அளிக்கும் மல்டி டெரெய்ன் டெக்னாலஜி [Multi Terrain Technology] ஆகியவை பொலெரோ நியோவுக்கு கரடுமுரடான நிலப்பரப்புகளில் ஆதிக்கம் செலுத்தும் திறனையும் நம்பிக்கையையும் அளிக்கின்றன. அனைத்து முக்கிய அம்சங்களுடனும் ஒரு முழுமையான வாகனமாக, பொலெரோ நியோ தயாரிப்பு தரம், செயல்திறன், எஸ்யூவியின் முக்கிய குணாதிசயங்கள் மற்றும் மதிப்பு ஆகியவற்றின் மீது நாங்கள் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் ஒரு தனித்துவமான தயாரிப்பாக அறிமுகமாகி இருக்கிறது" என்றார்.

புதிய பொலெரோ நியோவில் புகுத்தப்பட்டு இருக்கும் நவீன மேம்பாட்டு அம்சங்கள் அதன் தனித்துவ குணாதிசயம் மற்றும் வாகனத்தின் அழகியல் தோற்றத்தில் மட்டுமில்லாமல் 100 ஹெச்பி எம்ஹாக் எஞ்சின், கடினமான உறுதியுடன் கட்டமைக்கப்பட்டிருக்கும் உடல் பகுதி மற்றும் எங்கு வேண்டுமானாலும் பயணிக்க உதவும் செயல்பாட்டு அம்சங்கள் ஆகியவற்றிலும் புகுத்தப்பட்டுள்ளன. மேலும், இதன் ஆன் ஃபிரேம் கன்ஸ்ட்ரக்ஷன், பின்புற சக்கரம் இயக்கம் மற்றும் மல்ட்டி டெரெய்ன் தொழில்நுட்பம் ஆகியவை நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

புதிய பொலெரோ நியோ, சௌகரியமாக அமர்வதற்கு ஏற்ற ஒரு விசாலமான 7 இருக்கைகள் கொண்ட வாய்ப்புகளை வழங்குகிறது. மேலும் இவ்வாகனம் மூன்று வகைகளில் (என் 4-பேஸ், என் 8-மிட், என் 10-டாப் -(N4-base, N8-mid, N10- top)) மற்றும் ஏழு வண்ண விருப்பங்களில் (ராக்கி பீஜ், மெஜஸ்டிக் சில்வர், ஹைவே ரெட், பேர்ல் ஒயிட், டயமண்ட் ஒயிட், நெப்போலி பிளாக் மற்றும் ராயல் கோல்ட் [Rocky Beige, Majestic Silver, Highway Red, Pearl White, Diamond White, Napoli Black and Royal Gold] (விரைவில்). கிடைக்கிறது. வாடிக்கையாளர்களுக்கு புதிய பொலெரோ நியோ, ஜூலை 13, 2021 முதல் மஹிந்திரா டீலர்ஷிப்பில் கிடைக்கும்.

மல்டி டெரய்ன் டெக்னாலஜி (மேனுவல் லாக் டி்ஃபெரென்ஷியல் -(Manual Lock differential)) உடன் கூடிய விருப்பத் தேர்வுகளுடனான N10 (O) இதையடுத்து விரைவில் தொடங்கப்படும்.

## புத்தம் புதிய மஹிந்திரா பொலெரோ நியோ எஸ்யூவியின் முக்கிய சிறப்பம்சங்கள்

**ஆடம்பர தோற்றத்திலான உள்புறம்:**

- ப்ரீமியம் உணர்வை வழங்கும் இத்தாலிய உட்புற வடிவமைப்பு
- வெள்ளி நிற அலங்கார வடிவமைப்பிலான சென்டர் கன்சோல்
- ப்ரீமியம் தரத்திலான ஃபேப்ரிக் இருக்கைகள்.
- சௌகரியமாக உட்கார்ந்து பயணிக்க உதவும் 7 இருக்கைகள் கொண்ட அமைப்பு
- மேலும் கீழும் தேவைக்கேற்ப மாற்றிக்கொள்ள உதவும் ஸ்டீயரிங்
- உயரத்தை தேவைக்கேற்ப மாற்றியமைக்க உதவும் ஓட்டுநர் இருக்கை.
- முன்பக்கம் மற்றும் மத்தி வரிசையில் கைகளை வைத்து கொள்ள உதவும் ஆர்ம் ரெஸ்ட்
- கண்களைக் கவரும் ட்வின் பாட் இன்ஸ்ட்ரூமெண்ட் க்ளஸ்டர்.
- எலெக்ட்ரிகல் அம்சகளுடன் மாற்றியமைக்கும் ஒஆர்விஎம்
- முன்பக்கம் மற்றும் பின்பக்கம் வடிவமைக்கப்பட்டிருக்கும் பவர் விண்டோக்கள்.
- டீஃபாக்கர் உடன் கூடிய பின்பக்க கண்ணாடியைக் கழுவி, துடைக்கும் அம்சம்
- ரீமோட் லாக் மற்றும் கீலெஸ் எண்ட்ரி.
- இருபக்கமும் பின்பக்கமும் உறுதியான ஃபுட்ஸ்டெப்கள்
- விசாலமான, தேவைக்கேற்ப அதிகரிக்கும் வாய்ப்புள்ள ஃபூட் ஸ்பேஸ்.

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

## வெளிப்புறத் தோற்றத்தை நவீன பாணியில் காட்டும் சமகால அம்சங்கள்:

- அசல் எஸ்யூவி வடிவமைப்பு மற்றும் கவர்ந்திழுக்கும் ஆளுமை
- டிஆர்எல்களுடன் கூடிய ஸ்டேட்டின் பெண்டிங் ஹெட்லேம்ப்கள்
- ஸ்டைலிஷான அலாய் வீல்கள்
- ஸ்போர்ட்டி ஸ்பாய்லர்
- பொலெரோவின் சிக்னேச்சர் உடல்பகுதி பாதுகாப்பு அடுக்கு
- கமாண்டிங் ஹூட்

**மேம்பட்ட தொழில்நுட்பம்: தொடர்ந்து இணைப்பில் இருங்கள், சமீபத்திய தகவல்களுடன் இருங்கள், பொழுதுபோக்கை கொண்டாடியபடி இருங்கள்.**

- மேம்பட்ட 17.8 செ.மீ (7”) தொடுதிரையுடன் கூடிய இன்போடெயின்மென்ட் சிஸ்டம்
- அதிநவீன க்ரூஸ் கண்ட்ரோல்
- ஓட்டுநருக்கு தகவல்களை அளிக்கும் டிரைவர் இன்ஃபர்மேஷன் சிஸ்டம்.
- குரல் மூலம் செயதி அனுப்பும் ஹைடெக் வாய்ஸ் மெசேஜிங் சிஸ்டம்
- ப்ளூ சென்ஸ் மொபைல் அப்ளிகேஷன்.
- ஈகோ மோட்
- ESS [(Electronic Start-Stop)] உடன் கூடிய மைக்ரோ ஹைபிரிட் தொழில்நுட்பம்
- இன்டெல்லிபார்க் ரிவர்ஸ் அசிஸ்ட்

**பாதுகாப்பு: உங்களது பயணத்தின் ஒவ்வொரு மைலிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அம்சங்கள்**

- அதிக வலிமை கொண்ட ஸ்டீல் பாடி ஷெல்
- ஒட்டுநர் மற்றும் அவருக்கு பக்கத்தில் இருப்பவருக்குமான டுயல் ஏர்பேக்குகள்
- எலெக்ட்ரானிக் ப்ரேக் டிஸ்ட்ரிபியூஷன் உடனான ஏபிஎஸ்
- தானாகவே பூட்டிக் கொள்ளும் ஆட்டோமேட்டிங் டோர் லாக்
- உடனுக்குடன் எச்சரிகை செய்யும் ஹைஸ்பீட் அலெர்ட் வார்னிங்குகள்
- டிபெண்டபிள் கார்னரிங் ப்ரேக் கண்ட்ரோல்
- ISOFIX குழந்தைகள் இருக்கை
- ஸ்டேட்டிங் பெண்டிங் ஹெட்லேம்ப்கள்

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

- ஃபாலோ மீ ஹெட்லேம்ப்கள்
- டிஜிட்டல் இம்மொபிலைசர்
- சீட் பெல்ட் அணிவதை நினைவுறுத்தும் எச்சரிக்கை

**மஹிந்திரா பற்றி….:**

மஹிந்திரா நிறுவனம் 1945-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மிகப்பெரும் மற்றும் அனைவராலும் வியந்து பார்க்கப்படும் பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்றாக திகழும் இந்நிறுவனம், தற்போது 100 நாடுகளில், 2,60,000 பணியாளர்களுடன் பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டு நிறுவனமாக வெற்றிகரமான பாதையில் பயணித்து வருகிறது. இந்தியாவில், பண்ணை உபகரணங்கள், பயன்பாட்டு வாகனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதிச்சேவைகள் [ farm equipment, utility vehicles, information technology and financial services ] ஆகிய பிரிவுகளில் இந்நிறுவனம் முதன்மை இடத்தைப் பிடித்திருக்கிறது. மேலும் ட்ராக்டர்களின் உற்பத்தி எண்ணிக்கை அடிப்படையில் மஹிந்திரா உலகின் மிகப்பெரும் ட்ராக்டர் உற்பத்தி நிறுவனமாக முன்னிலை வகிக்கிறது. மேலும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல், வேளாண்மை, லாஜிஸ்டிக்ஸ், விருந்தோம்பல் துறை மற்றும் ரியல் எஸ்டேட் [renewable energy, agriculture, logistics, hospitality & real estate] ஆகியவற்றில் வலுவான செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறது.

மஹிந்திரா குழுமம் இஎஸ்ஜி-யை உலகளாவிய அளவில் முன்னெடுப்பதில் தெளிவான தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருகிறது.. கிராமப்புற செழிப்பை உருவாக்குவதிலும், நகர்ப்புற வாழ்வை மேம்படுத்துவதிலும், தான் செயல்பட்டுவரும் சமூகத்தின் அக்கறையிலும், பங்குதாரர்களின் வாழ்விலும் வளர்ச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் மஹிந்திரா குழுமம் செயல்பட்டு வருகிறது.

**மஹிந்திரா பற்றி மேலும் தெரிந்து கொள்ள பார்க்கவும்** www.mahindra.com

**ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக்கில் தொடர:** **@MahindraRise**

**கூடுதல் அப்டேட்களை பெற சப்ஸ்க்ரைப் செய்யவும்** https://www.mahindra.com/news-room

Media contact information

Ankita Upadhyay

Lead Marketing Communications (PV, CV, SCV and Pikup)

Mahindra & Mahindra Ltd.

Email - upadhyay.ankita@mahindra.com

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.

Copyright © 2021 Mahindra & Mahindra Ltd. All rights reserved.